### ஆர்.எஸ்.எஸ். எப்போதும் ஒரே வடிவில், ஒரே செயல்திட்டத்துடன் இருப்பதில்லை!

# தத்துவார்த்தப் பார்வையின்றி 'நடப்புப் பிரச்சினைகளை எதிர்க்கிறார்கள்' என்பதற்காக எவரையும் ஆதரித்துவிட முடியாது!

## 'கரப்பான் பூச்சி ஜனதா' பற்றி திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை!



சென்னை, ஜூன் 13-

"நாம் எதிர்க்கும் பா.ஜ.க.வை, தத்துவார்த்தப் பார்வையில் அல்லாமல் சில நடப்புப் பிரச்சினை களுக்காக சி.ஜே.பி. எதிர்க்கிறார்கள் என்ற ஒரே காரணத்துக்காக, அந்தக் குழுவை சமயோசிதமாக ஆதரிக்கலாம் என்று (Political Expediency) எவரையும் ஆதரித்துவிட முடியாது. இளைஞர்களின் எதிர்ப்புணர்வையும், போராட்டங்களையும் நாம் குறைத்து மதிப்பிட வேண்டியதில்லை என்றாலும், அவசரப்பட்டு விழுந்து ஆதரிக்க வேண்டியதில்லை. 'கரப்பான்பூச்சி ஜனதா' கொஞ்சகாலம் கண்காணிப்பிலேயே இருக்கட்டும்" என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

கடந்த மாதம் 15 ஆம் தேதி உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்யகாந்த், வேலையற்ற இளைஞர்களை கரப்பான் பூச்சிகள் என்றும், ஒட்டுண்ணிகள் என்றும், வேலையில்லாத காரணத்தால் தகவல் அறியும் உரிமைப் போராளிகளாகவும், பொது நல வழக்குத் தொடுப்பவர்களாகவும் கிளம்பிவிட்டார்கள் என்பதாகவும் நீதிமன்றத்திலேயே தெரிவித்தார் என்றொரு செய்தி வெளியானது. பின்னர் அடுத்த நாளே அதனை மறுத்து, "தாம் குறிப்பிட்டது போலிச் சான்றிதழ்கள் பெற்று வழக்குரைஞர்களாகவும், வேலையிலும் இருக்கும் இளைஞர்களைப் பற்றியே என்றும், பொதுவாக அனைவரையும் குறிப்பதல்ல" என்றும் ஒரு விளக்கம், நீதிபதி தரப்பில் இருந்து வெளியிடப்பட்டது.

### 'காக்ரோச் ஜனதா பார்ட்டி'

ஆனால், அவரது இந்தக் கருத்து இளைஞர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பலையை ஏற்படுத்தியது உண்மை. குறிப்பாக கரப்பான்பூச்சிகள் காக்ரோச்சஸ் என்று அவர் கூறிய வார்த்தையையே கொண்டு 'காக்ரோச் ஜனதா பார்ட்டி' என்ற பெயரில் சமூக ஊடகங்களில் ஒரு பக்கம் உருவாக்கப்பட்டு, அவரது கருத்தையும், நாட்டு நடப்புகளையும் எள்ளல் தொனியில் பரிகசிக்கும் பதிவுகள் வெளியிடப்பட்டன. இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்த இந்தத் தலைப்பு எதிர்ப்பு, ஒரே நாளில் பெரும் வரவேற்பைப் பெற்று, பல லட்சக்கணக்கானோர் விரும்பும் சமூக ஊடகப் பக்கமாக மாறிவிட்டது. பாரதிய ஜனதா கட்சிக்கு (பி.ஜே.பி) எதிராக சி.ஜே.பி. என்னும் பெயரில் உருவான இந்தப் பெயர் திடீரென இளைஞர்கள் மத்தியில் பிரபலமாகி, அது ஓர் அமைப்பாக உருவாவதற்கான சூழல் எழும் முன்னே அந்தப் பெயரில் மதுரையில் ஒரு பேரணி எல்லாம்கூட நடைபெற்று முடிந்தது.

இச் சமூக ஊடகப் பக்கத்தை உருவாக்கி நடத்துபவர் யார் என்று தேடி, அமெரிக்காவில் பயிலும் மகாராட்டிராவைச் சேர்ந்த ஊடகவியல் மாணவர் அபிஜித் தீப்கே என்பவர் தான் என்பதை அறிந்து, அவரும் இணையம் வழியாக ஊடகங்களுக்குப் பேட்டியளித்தார். இதனிடையே சி.பி.எஸ்.இ தேர்வு விடைத்தாள் திருத்தக் குளறுபடி, நீட் தேர்வு மோசடிகள் என்று எழுந்த பிரச்சினைகளையும் சி.ஜே.பி. கண்டிக்க, அதனையொட்டி டில்லியில் போராட்டத்தையும் அந்த அமைப்பு அறிவித்தது. போராட்டத்திற்கு அபிஜித் தீப்கே நேரில் வந்தார். பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் புத்தகத்தைத் தூக்கிக் காட்டியபடி அவர் விமான நிலையத்தை விட்டு வெளியில் வரும் காட்சி ஊடகங்களில் வெளியானது. இளைஞர்கள் பலர் பங்கேற்க, புது டில்லி ஜந்தர் மந்தரில் "போராட்டமும்" நடந்துள்ளது.

### இளைஞர்களின் சமூகக் கோபம்!

இளைஞர்களின் சமூகக் கோபமும், அது இப்படி பல வடிவங்களிலும் வெளி வருவதும் இயல்பானதே! தொடர்ந்து பல நாடுகளிலும், மாநிலங்களிலும் கூட அமைப்பு ரீதியாக அல்லாத இத்தகைய திடீர் போராட்டங்கள் பேருருக் கொள்வதையும் பார்த்து வந்திருக்கிறோம். எந்தவொரு போராட்டமும், அதற்கான உணர்வும் ஓரிரு பிரச்சினைகளுக்கான உடனடி எதிர்வினையாக அமைவதை மட்டும் வைத்து நாம் முடிவெடுத்துவிட முடியாது.

இந்தியாவில் இத்தகைய திடீர் போராட்டங்களின் வரலாற்றுப் பின்னணி என்ன? அவர்களின் கருத்தியல் அல்லது கொள்கைத் தெளிவு என்ன என்பதைப் பொறுத்து தான், இத்தகைய போராட்டங்களை முன்னெடுப்போர் அல்லது அதன் வழி நடப்போரை மதிப்பிட முடியும். ஏமாந்துவிடக் கூடாது.

'இட ஒதுக்கீடு பற்றி சிஜேபி பேச மறுக்கிறதே, சமூக நீதி குறித்தும், ஒடுக்கப்பட்டோர் மீதான பிரச்சினைகள் குறித்தும் இந்த அமைப்பினர் என்ன நினைக்கிறார்கள்?' என்ற கேள்வி எழுந்தபோது, இந்த சி.ஜே.பி. நிறுவனர் அபிஜித் தீப்கே, 'தான் ஒரு தலித்' என்றும், அதுவே போதுமான பதிலைச் சொல்லும் என்றும் 'எக்ஸ்' தளத்தில் தெரிவித்திருந்தார். உடனே, உயர்ஜாதியினர் பலர், அதற்கு மோசமான எதிர்வினைகளை வழக்கம் போல ஆற்றியிருந்தனர். "ஆக, தன்னைத் தானே தலைவராக முன்னிறுத்திக் கொண்ட இந்த ஜென் ஸீ (Gen Z) தலைவர், "தகுதி திறமைக்கு எதிரானவர் அப்படித்தானே!" என்று தொடங்கி, இன்னும் ஏராளமான வசை மொழிகள் வரை பொழிந்துள்ளனர். ஒருவர் தான் என்ன சமூகத்தவர் என்று சொன்னதும், அதைக் கொண்டே அவரை இழிவுபடுத்தும் இந்த மோசமான போக்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் இளைஞர்களிடமும் ஏராளமாக இருக்கிறது இந்தியாவெங்கும்! முகமூடி புரிகிறதா?

அதே வேளை, 30 வயது கொண்ட அந்த இளைஞர் அபிஜித் தீப்கே, முன்பு டில்லியில் படித்தபோது 2020 முதல் 2023 வரை ஆம் ஆத்மி கட்சியின் ஆதரவாளராக, சமூக ஊடகங்களில் செயல்படுபவராக இருந்திருக்கிறார். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஊழல் என்பதை முன்னிறுத்தி, ஆர்.எஸ்.எஸ். பின்புலத்தில் அன்னா ஹசாரே என்பவர் தொடங்கிய போராட்டத்தில் பங்கேற்ற அரவிந்த் கெஜ்ரிவால் போன்ற சிலரால் தோற்றுவிக்கப்பட்டது தான் ஆம் ஆத்மி! அது எப்போதும் சமூகநீதிக்கு ஆதரவாக இருந்ததில்லை, அதன் தலைவர் இடஒதுக்கீட்டுக்கு எதிரானவராகவே ஆரம்ப காலத்தில் சொல்லப்பட்டது கட்சி உருவாகி, ஆட்சியில் அமர்ந்துவிட்ட பின்னரும் கூட இட ஒதுக்கீடு குறித்து எதிரான நிலைப்பாடுகளையே அவர்கள் கொண்டிருந்தார்கள். பொருளாதாரத்தில் நலிந்துள்ள உயர்ஜாதியினருக்கான இடஒதுக்கீடு என்ற பா.ஜ.க.வின் சூழ்ச்சிக்கு ஆதரவாகத் தான் இருந்தார்கள். அத்தகைய அமைப்பை ஆதரித்த ஒருவரை, அவரது சமூகத்தை வைத்து மட்டும் முடிவு செய்துவிட முடியாது.

### வெகுஜனப் புத்திக்கு ஊட்டமளிக்கும் ஆர்.எஸ்.எஸ்.

இத்தகைய போராட்டங்களிலும், அமைப்புகளிலும், திடீர் ஈர்ப்பு காரணமாகப் பலர் இணைவதுண்டு. ஆனால், அவர்களின் கொள்கைப் பின்புலமும், பார்வையும் எப்படியிருக்கும் என்பதையும், அதை நெறிப்படுத்தக் கூடியதாக இத்தகைய அமைப்புகள் இருக்குமா என்பதையும் அவசரப்பட்டு முடிவு செய்ய முடியாது. கடந்த காலங்களில் இத்தகைய அமைப்புகள் வெகுஜனப் புத்திக்கு ஊட்டமளிக்கும் ஆர்.எஸ்.எஸ்.சின் பின்புலத்தில் தோற்றுவிக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருக்கிறோம். தமிழ்நாட்டிலும் கூட அப்படியொரு அமைப்பு ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க.வின் 'ஆசீர்வாதத்துடன்' ஆரம்பிக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம். ஆர்.எஸ்.எஸ். எப்போதும் ஒரே வடிவில், ஒரே செயல்திட்டத்துடன் இருப்பதில்லை என்பதையும் நாம் எச்சரிக்கையோடு நினைவு கொள்ள வேண்டும்.

முறையாகத் திரண்டெழுந்து ஒரு முழுமையான புரிதல் நிறைந்ததாக மாற வேண்டிய எதிர்ப்புணர்வுக்கு வடிகாலாகவும், இத்தகைய சூழலில் அரசுக்கும், ஆதிக்கத்திற்கும் எதிராக இளைஞர்கள் உண்மையான சமூகநீதி, திராவிட, பொதுவுடைமை இயக்கங்களுக்குச் செல்லாமல் மடை மாற்றவும் இத்தகைய அமைப்புகள் உருவாக்கப்படவோ அல்லது கொண்டு செல்லப்படவோ வாய்ப்புகள் நிறைய உண்டு. கடந்த காலங்களின் அனுபவம் அதுவே! பேரெழுச்சியுடன் வந்த சில அமைப்புகள் காலத்தால் காணாமல் போய்விடுகின்றன அஸ்ஸாம் கண பரிஷத் போல!

### ஊடகங்கள் உருவாக்கும் பிம்பம்!

ஏற்கெனவே இருக்கும் அமைப்புகள் மீது ஊடகங்கள் உருவாக்கியிருக்கும் பிம்பமும், இளைஞர்களுக்கு இருக்கும் சலிப்புமே இத்தகைய திடீர் அமைப்புகளை நோக்கி அவர்களைக் கொண்டு செல்கிறது. அது நெடுங்காலமாகப் பல்வேறு சூழல்களைப் பார்த்து, எதிர்கொண்டு, அமைப்பை நிருவகித்து, அதன் ஏற்ற இறக்கங்களை அனுபவித்து, கவனமாகச் செயல்பட்டு, பல சாதனைகளைப் புரிந்திருக்கும் அமைப்புகள் மீது ஊடகங்களும், ஆதிக்கவாதிகளும் உண்டாக்கியிருக்கும் திட்டமிட்ட சலிப்புணர்வு. இதையெல்லாம் எதிர்கொள்ளக் கூடிய வர்களா? என்று யோசிக்கும் முன்பு, இதையெல்லாம் எதிர்நோக்கியிருப்பார்களா என்பதே சந்தேகம் தான்! ஆர்.எஸ்.எஸ். ஆக்டோபஸின் கரங்களின் அணைக்கவும், விழுங்கவும், அடிக்கவும், அழிக்கவும் நிரம்பப் பழக்கப்பட்டவை.

### எவ்வளவோ பார்த்து விட்டோம்... இதைப் பார்க்கமாட்டோமா?

நாம் எதிர்க்கும் பா.ஜ.க.வை, தத்துவார்த்தப் பார்வையில் அல்லாமல் சில நடப்புப் பிரச்சினை களுக்காக அவர்களும் எதிர்க்கிறார்கள் என்ற ஒரே காரணத்துக்காக, அந்தக் குழுவை சமயோசிதமாக ஆதரிக்கலாம் என்று (Political Expediency) எவரையும் ஆதரித்துவிட முடியாது. இளைஞர்களின் எதிர்ப்புணர்வையும், போராட்டங்களையும் நாம் குறைத்து மதிப்பிட வேண்டியதில்லை என்றாலும், அவசரப்பட்டு விழுந்து ஆதரிக்க வேண்டியதில்லை. கரப்பான்பூச்சி ஜனதா கொஞ்சகாலம் கண்காணிப்பிலேயே இருக்கட்டும்! எவ்வளவோ பார்த்து விட்டோம்... இதைப் பார்க்கமாட்டோமா?

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.



தேனி வடக்கு மாவட்டம் போடி மீனாட்சிபுரம் பேரூர் பகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு பேரூர் செயலாளர் செல்வம் பொதுமக்கள் மற்றும் கழகத்தினருக்கு இனிப்புகள் வழங்கினார். உடன் மாவட்ட பிரதிநிதி கார்த்தி, மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் முத்துக்குமார், போடி தொ.மு.ச. தலைவர் ராஜா. நெசவாளர் அணி, அமைப்பாளர் ஈஸ்வரன், அவை தலைவர் எஸ்.பி. ராஜப்பன், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர், மணிமுத்து, பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் விஜயகுமார் மற்றும் அப்துல் ரகுமான் ஒன்றிய நிர்வாகிகள் பேரூர் நிர்வாகிகள் கிளைக் கழக செயலாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### "ரீல்ஸ் மாடல்" ஆட்சியில் மேட்டூர் அணையை திறக்கவில்லை!

# விவசாயக் கடன் தள்ளுபடி போல, குறுவைத் தொகுப்பும் ஏமாற்றும் திட்டம்தான்!

## மாநில விவசாய அணிச்செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிக்கை!

சென்னை, ஜூன் 13-

கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் விவசாய புரட்சியை ஏற்படுத்திய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஆண்டு தோறும் ஜூன் 12 ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டு, விவசாயத்தை மேம்படுத்திய அந்த நடைமுறையை கூட இந்த நீர்மேலாண்மையிலும் அனுபவமில்லாத அரசு கடைப்பிடிக்க முடியாமல் தோற்று ப்போயிருக்கும் நிலையிலும், வேளாண்மைக்கு என தனி பட்ஜெட் அறிவித்த திராவிட மாடல் அரசின் பிதாமகர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வேளாண்மை திட்டங்களை போல அல்லாமல், தற்போது வெற்று அறிவிப்பாக ரீலஸ் மாடல் அரசு வெளியீட்டிருக்கும் குறுவை தொகுப்பு மற்றும் மும்முனை மின்சார அறிவிப்பு என்பது அடுப்பை பற்றவைக்காமலேயே சமைப்பது போல உள்ளது என தி.மு. கழக விவசாய அணி கண்டனம் செய்கிறது.

தமிழ்நாட்டின் விவசாயப்புரட்சி என்பதும் விவசாயிகளின் பொற்காலம் என்பதும் தி.மு.க. ஆட்சிகாலம்தான் என்பது மறைக்க முடியாத உண்மை, முக்கியமாக குறிப்பிட வேண்டுமென்றால், இலவச மின்சாரத்தை விவசாயிகளுக்கு வழங்கியது; ஆட்சி வந்தவுடன் 7,000 கோடி ரூபாய் விவசாயிகள் கடனை முழுமையாக தள்ளுபடி செய்தது.

அதுமட்டுமல்ல; தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்த போதும் விவசாயிகளை கைவிட்டதும் இல்லை. ஆளும் கட்சியின் விவசாய வேதனைகளால் தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளை ஆட்சியாளர்கள் கொச்சைப்படுத்திய போது, அந்த குடும்பங்களை நேரடியாக சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறி உதவியவர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

தமிழ்நாட்டின் அனைத்து விவசாயம் சார்ந்த மாவட்டங்களிலும் விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் சந்திப்பு கூட்டங்கள் , காவிரி மீட்பு பேரணி இப்படி பல விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளை எதிர்க்கட்சியாக இருந்தபோதும் தி.மு.க. செய்ததை தற்போதைய ஆட்சியாளர்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

### தமிழ்நாட்டை உயர்த்தியது திராவிட மாடல் அரசு!

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக ஒவ்வொரு ஆண்டும் சரியாக ஜூன் 12 மேட்டூர் அணைதிறப்பு, சோழர்கள் ஆட்சிக்கு பின்னர் அனைத்து நீர்நிலைகளும் தூர்வாரும் பணிகள், கடைமடை பகுதி வரையிலான நீர் பாசனம், வேளாண் மையங்களில் இடுபொருட்களும், விதை உரம் உள்ளிட்ட விவசாய உற்பத்தி பொருட்கள் போதுமான அளவு இருப்பு, அதிக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், அங்கு பணிபுரியும் சுமைப்பணி தொழிலாளர்களுக்கும் ஊதிய உயர்வு இப்படி இவைகளெல்லாம் வேளாண் வளர்ச்சியை நாட்டிலேயே உயர்ந்த மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்திக்காட்டியது திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகர் அரசு.

தமிழ்நாட்டில் இந்த புரட்சிகளெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது குளிரூரட்டப்பட்ட கேரவனுக்குள் படப்பிடிப்பு தளத்தில் இருந்தவர்கள், தற்போது விவசாயிகளுக்கு என்ன தேவை? என்பதை கூட அறியாமல் குறுவை தொகுப்பு திட்டத்தையும், மும்முனை மின்சாரத்தையும் அறிவிப்பாக வெளியிட்டிருக்கிறார்கள் .

தேர்தல்நேரத்தில்யாரோ எழுதிக்கொடுத்த விவசாய கடன் தள்ளுபடி வாக்குறுதியை படித்து விவசாயிகளை ஏமாற்றி வாக்கு சேகரித்த அவர்கள் தற்போது, அதைக்கூட நிறைவேற்ற வக்கின்றி குறுவை தொகுப்பு திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள்.

திராவிடமாடல் அரசின் பிதாமகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த கழக ஆட்சியில் கொடுத்த வாக்குறுதியின்படி தி.மு.க. அரசு 2021 ஆம் ஆண்டு பொறுப் பேற்றவுடன், கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற நகைக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்தார்.

இப்படி விவசாயம் பற்றியும்,விவசாயிகளின் பிரச்சனை குறித்த புரிதல் இன்றியும், டெல்டா விவசாயத்தின் உயிர்நாடி மேட்டூர் அணை திறப்பு குறித்த அக்கறை இன்றியும் குறுவை திட்ட சாகுபடி தொகுப்பு திட்டத்தை அறிவித்து இருக்கிறது ரீல்ஸ் மாடல் அரசு.

கர்நாடகத்தில் மேகதாதுவில் அணை கட்ட எல்லா முயற்சியை எடுக்கும் காங்கிரஸ் தலைமையிலான அரசுக்கு எதிராக, தனது ஆட்சி கவிழ்ந்து விடகூடாது என்கிற பயத்தில் மேகதாது அணை பிரச்சனையில் வாய்திறக்கவே இந்த அரசு பயப்படுகிறது.

### மின்தடையை போக்க நடவடிக்கை எடுப்பீர்!

தமிழ்நாட்டில் புதிதாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கும் இந்த ரீல்ஸ் மாடல் அரசு, மாநிலம் முழுவதும் தங்களது அனுபவமற்ற நிர்வாக திறனால் ஏற்பட்டிருக்கும் மின் தடையை போக்க நடவடிக்கை எடுக்காமல், அதை திசைதிருப்பி மடைமாற்றம் செய்திட காரணம் தேடிக் கொண்டிருக்கும் அமைச்சர்களை கொண்டிருக்கும் நிலையில், விவசாயி களுக்கான குறுவை தொகுத்திட்டம் வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவாதாகவே அமைந்திருக்கிறது.

ஆனால் கடந்த கழக ஆட்சியின்போது திராவிட மாடல் அரசின் பிதாமகர் மு.க.ஸ்டாலின்அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் நிர்வாக திறத்தால், 2021ல் இருந்த 32,595 மெகாவாட் மின் நிறுவுதிறன் 36,671 மெகாவாட்டாக உயர்த்தப்பட்டு, மாநிலத்தில் மின்வெட்டு இல்லாத நிலை உருவாக்கப் பட்டது. விவசாய இணைப்புகள்: மூன்றாண்டுகளில் சுமார் 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்க ஆணையிடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

இப்படி திராவிட மாடல் அரசின் பிதாமகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சியில் அனைத்து துறைகளுமே விவசாய மேம்பாட்டை மையப்படுத்தி செயல்பட்டதால்தான், கழக ஆட்சின் போது நெல் உற்பத்தி பல புதிய உச்சங்களை எட்டியது. தமிழ்நாட்டில் ஒட்டு மொத்த நெல் உற்பத்தி 120 லட்சம் டன் என்ற அளவைத் தாண்டியது. அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 4 ஆண்டுகளில் 42 லட்சத்திற்கும் அதிகமான மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

தி.மு.க. அரசின் 4 ஆண்டு காலத்திலேயே சுமார் 42,61,386 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு சாதனை படைத்தது. நெல் கொள்முதல் ஈரப்பத அளவினை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக அதிகரிக்க ஒன்றிய அரசிற்கு தமிழ்நாடு அரசு கோரிக்கை விடுத்து அதனை நடைமுறைப்படுத்தியது. விவசாயி களின் நலனைக் காக்க, ஒன்றிய அரசின் ஆதார விலையுடன் மாநில அரசின் சார்பில் கூடுதல் ஊக்கத் தொகையும் வழங்கப் பட்டது.

ஆனால் திட்டங்களை மட்டுமே அறிவித்து "ரீல்ஸ் போடுங்கள் ஆட்சி தொடர்ந்துவிடும்" என்கிற கொள்கைகளோடு ஆட்சி நடத்தும் தற்போதய ஆட்சியாளர்கள், குறுவை தொகுப்பு , மும்முனை மின்சாரம் போன்ற வெற்று அறிக்கைகளை வெளியிடும் முன், அண்டை மாநிலமான கர்நாடகாவில் தனது ஆட்சி நடக்க தமிழ்நாட்டில் முட்டுக்கொடுக்கும் காங்கிரஸ் கட்சி ஆள்வதால், அவர்களிடம் இணக்கமாக பேசி காவிரி நீரை பெறவேண்டும் , மேகதாது அணை கட்டுவதை எதிர்த்து பேசவேண்டும், அனைத்து கட்சி கூட்டத்தை நடத்தி வேளாண்மை கொள்கைகள் திட்டங்களை விவாதித்து கலந்து ஆலோசிக்க வேண்டும். விவசாய அமைப்பு பிரதிகளை அழைத்து பேசவேண்டும் .

### கொஞ்சமாவது படித்து பார்க்க வேண்டும்!

எழுதிக்கொடுக்கும் அறிக்கைகளை ஏற்ற இறக்கத்தோடு பேசுவதற்கு முன்பு தி.மு.க. ஆட்சியின் சாதனைகளான, உபரி நிலத்தை மீட்டு விவசாயிகளுக்கு மறுவிநியோகம் செய்தது,விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தந்தது,

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை நாட்டிலேயே முதன்முதலில் கொண்டுவந்தது,

விவசாய தொழிலாளர் நல வாரியம் அமைத்தது, கரும்பு விலையை உயர்த்திக்கொடுத்தது, தமிழ்நாட்டில் உழவர் சந்தை அறிமுகம் செய்தது, கூட்டுறவு கடன் தள்ளுபடி அமலாக்கம் செய்தது,பயிர்க் கடன் வட்டி குறைப்பு,தமிழ் நாட்டில் உழவர் சந்திப்பு விரிவாக்கம் செய்தது,நெல் விவசாயிகளுக்கு சிறந்த ஊதியம் வழங்கியது,

பயிர் காப்பீட்டு மானியங்கள் மற்றும் இழப்பீடு வழங்கியது ,ஆதி திராவிடர் விவசாயிகளுக்கு அதிகாரம் அளித்தல்,காவிரி குண்டாறு இணைப்புத் திட்டம், தாமிரபரணி கருமேனியாறு நம்பியார் இணைப்பு திட்டம்,கரும்புச் சாலை மேம்பாட்டு முயற்சி, தென்னை விவசாயிகளுக்கான நல உதவி,உபரி நிலத்தை மீட்டு விவசாயிகளுக்கு மறுவிநியோகம் செய்தது,

### விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தந்தது!

நேரடி நெல் கொள் முதல் நிலையங்களை நாட்டிலேயே முதன்முதலில் கொண்டுவந்தது, விவசாய தொழிலாளர் நல வாரியம் அமைத்தது, கரும்பு விலையை உயர்ததீக்கொடுத்தது,தமிழ்நாட்டில் உழவர் சந்தை அறிமுகம் செய்தது, கூட்டுறவு கடன் தள்ளுபடி அமலாக்கம் செய்தது, பயிர்க் கடன் வட்டி குறைப்பு,

தமிழகத்தில் உழவர் சந்திப்பு விரிவாக்கம் செய்தது, நெல் விவசாயிகளுக்கு சிறந்த ஊதியம் வழங்கியது,பயிர் காப்பீட்டு மானியங்கள் மற்றும் இழப்பீடு வழங்கியது,ஆதி திராவிடர் விவசாயிகளுக்கு அதிகாரம் அளித்தல்,காவிரி குண்டாறு இணைப்புத் திட்டம், தாமிரபரணி கருமேனியாறு நம்பியார் இணைப்பு திட்டம்,கரும்புச் சாலை மேம்பாட்டு முயற்சி,தென்னை விவசாயிகளுக்கான நல உதவி,விளிம்புநிலை விவசாயிகளுக்கு அதிகாரம் அளித்தல்

இப்படி விவசாயி களுக்கும், விவசாய தொழிலாளர்களுக்கும், வேளாண் வளர்ச்சிக்கும் தி.மு.க.வின் அரிய திட்டங்களில் சிலவற்றை யாவது கொஞ்சம் படித்துப் பார்க்க வேண்டும். செய்வார்களா?

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பேரூர் ஆ. நடராஜன்

**ஜூன் 13 (2017)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டதோடு, தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்தவர்.

கழகத்தின் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை துவக்க காலத்திலேயே, அதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கழக தொழிலாளர் அணிச் செயலாளராகவும் – தொ.மு.ச. பேரவைத் தலைவராகவும், தமிழ் மாநிலக்குழுத் தலைவராகவும் பொறுப்பு வகித்து பணியாற்றியவர்.

1977, 1984, 1989, 1996 ஆகிய நான்கு முறை பேரூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

"தொழிலாளர் நலனுக்காகவே தினசரி சிந்தித்து வாழ்ந்து வந்த ஒரு மாபெரும் தூணை இழந்து நிற்கிறது கழகம்" என கழக செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**